JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 563/2024 |
| | : | Prosecution P.W - 22 |
| NAME | : | சுதா |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday of 05.11.2024

**முதல் விசாரணை**

நான் வெய்க்காலிபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் பீடீ சுற்றும் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எனக்கு கிருஷ்ணன், அந்தோணிராஜ், செல்வராஜ், ஜோசப் ராஜ், பூங்கொடி சூசை, அருமைகிளி, டேவிட் அமல்ராஜ், பாலமுருகன், செல்வராணி, சீதாலெட்சுமி, பொன் பாண்டி, சாந்தி, குணசீலன், முத்துலெட்சுமி, செல்வக்குமாரி, முருகன், சரோஜா, மணிராஜ், பொன்சேகர் ஆகியோர்களை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகள் சீட்டு பிரித்தார்கள். நம்பிக்கையாக சீட்டு போடுங்கள் பணம் தருகிறோம் என்று சொன்னார்கள். அந்த நம்பிக்கையில் சீட்டு போட்டேன். ஆஜர் எதிரிகள் ரூ.1 லட்சம் மாதச்சீட்டும், ரூ.30000 வாரச்சீட்டும், ரூ.50000 வாரச்சீட்டும், ரூ.61000 வாரச்சீட்டும், ரூ.60000 வாரச்சீட்டும் நடத்தினார்கள்.

நான் ரூ.60000 வாரச்சீட்டில் 5 சீட்டுகள் சேர்ந்தேன் மொத்தம் 121 வாரங்கள் சீட்டு செலுத்தவேண்டும். நான் 38 வாரங்கள் சீட்டு செலுத்தினேன். நான் மொத்தம் 5 சீட்டுகளுக்கும் ரூ.58700 செலுத்தினேன். 38 வாரங்களுக்கு பிறகு ஆஜர் எதிரிகள் சீட்டு பிரிக்கவில்லை நான் அவர்கள் வீட்டில் சென்று கேட்டபோது அவர்களின்

மனைவி ஆஜர் எதிரிகள் வீட்டில் இல்லை என்றும் அவர்களை கேட்டு வீட்டுக்கு வரக்கூடாது என்றும் சொன்னார்கள். வெளியே போங்கள் என்று சொன்னார்கள். 2019 ல் நான் கேட்கபோனேன். பொங்கலுக்கு போய்விட்டு தீபாவளிக்கு வந்தார்கள். கிருஷ்ணன் என்பவர்கள் ஆஜர் எதிரிகளிடம் சீட்டு பணம் கேட்க போனார்கள் எனது மதினி மல்லிகாவும் சீட்டு போட்டிருந்தார் எனது மதினியும் என்னிடம் பணம் கேட்க போகலாம் என்று சொன்னார். நானும் போய் பணம் கேட்டேன். அப்போது ஆஜர் எதிரிகள் புண்ட மகனே என்று பேசினார்கள். சீட்டு போட்டதற்கு என்ன அத்தாட்சி இருக்கிறது என்று பேசினார்கள். பணம்கேட்டால் இல்லாமல் ஆக்கிவிடுவேன் என்று பேசினார்கள். காலை 7.00 மணிக்கு பணம் கேட்டோம். அதற்கு பிறகு சீட்டு போட்ட எல்லோரும் சேர்ந்து கடையம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். அதற்கு பிறகும் பணம் கிடைக்கவில்லை போலிஸ் அம்மா வந்து விசாரித்தார்கள்.

1ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை

நான் முதல் விசாரணையில் சொன்னதைத்தான் போலிஸ் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான். ஆஜர் எதிரிகளில் மாயவன்யார் மாயவ நாதன் யார் என்றால் சாட்சி ஆஜர் 1ம் எதிரியை பார்த்து மாயவநாதன் சார் என்றும் ஆஜர் 2ம் எதிரியை பார்த்து மாயவன் என்றும் சொன்னார்.

புகாரில் யார் எல்லாம் கையொப்பம் செய்தோம் என்றால் 40 பேருக்கு மேல் கையொப்பம் செய்தோம். அந்த புகாரை நான் படித்துபார்த்தேனா என்றால் ஆமாம். அந்த புகாரில் என் பெயர் இருந்ததா என்றால் என் கணவர் பெயர் இருந்தது. என் பெயர் இல்லை என் கணவர்பெயரில் நான்தான் சீட்டு போட்டேன். என் கணவர் பெயர் என்ன என்றால் ஆத்தியப்பன்.

டேனியல் தங்கராஜ் மனைவி சுதா என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கிருஷ்ணனின் அப்பா பெயர் எனக்கு தெரியுமா என்றால் அவர்களை எல்லோரையும் தெரியும் அவர்களின் அப்பா பெயர் எனக்கு தெரியாது. சரோஜா என்பவரை எனக்கு தெரியுமா என்றார் சீட்டு பணம் செலுத்தும் இடத்தில் அவர்களை பார்த்திருக்கிறேன்.

கிருஷ்ணன், அந்தோணிராஜ், செல்வராஜ், ஜோசப் ராஜ், பூங்கொடி சூசை, அருமைகிளி, டேவிட் அமல்ராஜ், பாலமுருகன், செல்வராணி, சீதாலெட்சுமி, பொன் பாண்டி, சாந்தி, குணசீலன், முத்துலெட்சுமி, செல்வக்குமாரி, முருகன், சரோஜா, மணிராஜ், பொன்சேகர் ஆகியோர்களை எனக்கு தெரியும் என்று இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பொங்கலுக்கு போய்விட்டு தீபாவளிக்கு வந்தார்கள் என்று சொல்லியுள்ளதில் அந்த இடைப்பட்ட காலத்தில் புகார் எதுவும்

கொடுத்தேனா என்றால் இல்லை. சீட்டு போட்டதாக சொல்லும் யார்ரேனும் அந்த இடைப்பட்ட காலத்தில் புகார் எதுவும் கொடுத்தார்கள் என்றால் தெரியவில்லை. ரூ.60000 சீட்டு எந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டது என்றால் தெரியவில்லை. ஒவ்வொரு வாரமும் எவ்வளவு பணம் செலுத்துகிறேன் என்று குறித்து வைத்தேனா என்றால் குறித்து வைக்கவில்லை. நான் வாரத்திற்கு எவ்வளவு செலுத்துவேன் என்றால் ரூ. 2500 செலுத்துவேன், ஒரு சீட்டுக்கு ரூ.120 அளவில் கழிவுபோகும் அந்த கழிவுத்தொகையை நிறுத்திவைத்துக்கொண்டு அடுத்த வாரத்தில் அந்த கழிவுத்தொகை போக மீதித்தொகையை செலுத்துவேன். ஒவ்வொரு வாரமும் கழிவுத்தொகை வித்தியாசமாக இருக்கும் என்றால் சரிதான். 121 வாரங்களும் கழிவுத்தொகை ஒரே அளவில் இருக்காது என்றாலும் ஏற்ற இறக்கமாக இருக்கும் என்றாலும் சரிதான், ஒரு வாரம் 120 கழிவுபோகும், ஒரு வாரம் 170 கழிவுபோகும்.

121 வாரத்தில் ஒவ்வொரு வாரமும் எவ்வளவு தொகை கழிவுபோயிருக்கிறது என்று தொகை குறிப்பிட்டு என்னால் தற்போது சொல்லமுடியாது என்றால் சரிதான். காவல் துறையில் 121 வாரம் எவ்வளவு தொகை செலுத்தினேன் என்று எப்படி சொன்னேன் என்றால் நான் அப்படி சொல்லவில்லை நான் 121 வாரங்கள் செலுத்தவேண்டும் என்றும் அதில் 38 வாரங்கள் செலுத்தி இருக்கிறேன் என்றும் சொன்னேன். நான் செலுத்தியதாக சொல்லும் 38 வாரங்களுக்கு ஒவ்வொரு வாரமும் எவ்வளவு கழிவு போனது என்று என்னால் அறுதியிட்டு சொல்லமுடியாது என்றால் சரிதான். அடுத்தடுத்த வாராங்களுக்கு கழிவு போக எவ்வளவு சீட்டு பணம் செலுத்தினேன் என்று என்னால் சொல்லமுடியாது என்றால் சரிதான். கழிவுத்தொகை அங்குதான் இருக்கும். நான் செலுத்தியதாக சொல்லும் சீட்டுத்தொகையை எழுதி வைத்திருந்தேனா என்றால் சாட்சி கிருஷ்ணனனும் என்னைப்போலத்தான் ரூ.60000 சீட்டு போட்டு எழுதிவைத்திருந்தார். அதனை வைத்து சொன்னேன். அவ்வாறு அவர் எழுதி வைத்திருந்த குறிப்பை போலிசாரிடம் கொடுத்தோமா என்றால் ஆமாம். நாங்கள் எல்லோரும் சேர்ந்து கொடுத்தோம். கிருஷ்ணன் ரூ.60000 சீட்டில் எத்தனை சீட்டு போட்டிருந்தார் என்றால் அது எனக்கு தெரியாது. மேற்படி கிருஷ்ணன் என்னைபோல் ரூ.60000 சீட்டில் 5 சீட்டு செலுத்தியிருந்தால் என்னுடைய தொகையும் கிருஷ்ணன் என்பவரின் தொகையும் ஒரே தொகையாக இருக்குமா என்றால் சரிதான். ஆனால் ரூ.60000 சீட்டில் கிருஷ்ணன் 3 சீட்டு செலுத்தியிருந்தால் என்னுடைய தொகையும் கிருஷ்ணனின் தொகையும் வேறுவேறாக இருக்கும் என்றால் சரிதான். அவ்வாறு கிருஷ்ணினின் 3 சீட்டு தொகையை பார்த்துத்தான்

என்னுடைய தொகையை சொன்னேனா என்றால் ஆமாம் அதை வைத்து என்னுடைய 5 சீட்டுக்கு பார்த்துசொன்னேன். நான்இதுவரை ஏலத்தில் கலந்துகொண்டுள்ளேனா என்றால் இல்லை. என் மகன் தான் போவார். என் மகன் இந்த சீட்டு ஏலம் எடுத்துள்ளாரா என்றால் இல்லை. ரூ.60000 சீட்டு எந்த வருடம் மாதம் ஆரம்பிக்கப்பட்டது என்றால் எனக்கு மாதம் வருடம் தெரியவில்லை. இதற்கு முன்னாள் என் மகன் ஏலம் எடுத்ததாக சொல்லும் சீட்டு எப்போது ஆரம்பிக்கப்பட்டது என்றால் தெரியவில்லை.இந்த சீட்டுக்கு முன்பு அந்த சீட்டு.

முதல் விசாரணையில்சொன்னது போல் எந்த சம்பவமும் நடைபெற்றிருப்பது இல்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

மாயவன்கோவில் நிர்வாகம் செய்வது சம்மந்தமாக அசா1 கிருஷ்ணன் ஒரு தரப்பாக இருந்து செயல்படுவதால் அசா1 கிருஷ்ணனுக்கு ஆதரவாக நானும் மற்ற சாட்சிகளும் இருந்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை

ஏலம் எடுத்த நபர் ஏலம் நாளில் இருந்து முழுத்தொகையை செலுத்தவேண்டும் என்றால் சரிதான். ஏலம் எடுத்தவுடன் கோவிலில் வைத்து சீட்டுத்தொகையை கொடுத்துவிடுவார்கள் என்றால் சரிதான். போலிசார் என்னை என்றைக்கு விசாரித்தார்கள் என்றால் புகார் கொடுத்த பின்பு நான்கு நாட்கள் கழித்து விசாரித்தார்கள்.

நான் சொல்வது போல் முதல் விசாரணையில் சொன்னது போல் இந்த வழக்கிற்கும் 2ம் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால சரியல்ல. 2ம் எதிரியை அவருக்கு வேண்டப்பட்டவரோ யாரும் தனிப்பட்ட முறையில் சீட்டு நடத்தவில்லை என்றால் சரியல்ல.

1ம் எதிரி தரப்பில் செய்யப்பட்ட குறுக்குவிசாரணை 2ம் எதிரி தரப்பில் ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tr.M.Ponpandi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 563/2024 |
| | : | Prosecution P.W - 21 |
| NAME | : | பொன்சேகர் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday of 05.11.2024

**முதல் விசாரணை**

நான் அரியப்பபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எனக்கு கிருஷ்ணன், அந்தோணிராஜ், செல்வராஜ், ஜோசப் ராஜ், பூங்கொடி சூசை, அருமைகிளி, டேவிட் அமல்ராஜ், பாலமுருகன், செல்வராணி, சீதாலெட்சுமி, பொன் பாண்டி, சாந்தி, குணசீலன், முத்துலெட்சுமி, செல்வக்குமாரி, முருகன், சரோஜா, மணிராஜ் ஆகியோர்களை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகள் சீட்டு நடத்தினார்கள். என்னிடம் அவர்கள் சீட்டு சரியாக நடத்துவார்கள் என்று சொன்னதால் நான் சீட்டு போட்டேன். ஆஜர் எதிரிகள் வாரச்சீட்டு, மற்றும் மாதச்சீட்டு நடத்தினார்கள் நான் ரூ.50000 வாரச்சீட்டில் 4 சீட்டுக்களும், ரூ. 62000 வாரச்சீட்டில் 2 சீட்டுக்களும் சேர்ந்தேன்.

நான் ரூ. 50000 வாரச்சீட்டில் 42 வாரங்கள் செலுத்தினேன். நான் 4 சீட்டுகளுக்கும் மொத்தம் ரூ. 69560 செலுத்தினேன்.

நான் ரூ. 62000 வாரச்சீட்டில் 118 வாரங்கள் செலுத்தினேன். நான் 2 சீட்டுகளுக்கும் மொத்தம் ரூ. 86600 செலுத்தினேன்.

2019 முதல் மாதம் வரை சீட்டு செலுத்தினேன். அதற்கு பிறகு ஆஜர்

எதிரிகள் ஏமாற்றி விட்டு போய்விட்டார்கள். அதற்கு பிறகு 9 மாதங்கள் கழித்து 22.10.2019 ம் தேதி காலையில் ஆஜர் எதிரிகள் வந்துள்ளார்கள். கிருஷ்ணன் ஆஜர் எதிரிகளிடம் அவர்கள் வீட்டில் கேட்டுக்கொண்டிருப்பதை கேள்விபட்டு நான் சீட்டு பணம் கேட்க போனேன். ஆஜர் எதிரிகள் கீழ்தரமான தேவடியா மகனே என்று ஏசினார்கள். என்னையும் அதே போல் பேசினார்கள். சீட்டு ரூபாய்க்கு என்ன ஆதாரம் இருக்கிறது என்று பேசினார்கள். திரும்ப கேட்டால் கொலை கூட செய்வேன் என்று மிரட்டினார்கள். நாங்களும் கடையம் காவல் நிலையம் சென்றோம். கிருஷ்ணன் புகார் கொடுத்தார். எனக்கு பணம் கிடைக்கவில்லை யாருக்கும் பணம் கிடைக்கவில்லை. மொத்தம் 75 பேருக்கு மேல் இருப்பார்கள். பெண் போலிஸ் என்னை விசாரித்தார்கள்.

1 ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை

நான் என்ன படித்துள்ளேன் என்றால் ITI படித்துள்ளேன். நான் என்னவேலை செய்கிறேன் என்றால் விவசாயம் செய்கிறேன். நான் ரூ.50000 சீட்டு போட்டதாக சொல்லியுள்ளதில் அது எந்த தேதியில் ஆரம்பிக்கப்பட்டது என்றால் தேதி சரியாக ஞாபகம் இல்லை, 2017 –ல் ஆரம்பிக்கப்பட்டது. எந்த மாதம் ஆரம்பிக்கப்பட்டது என்று ஞாபகம் உள்ளதா என்றால் ஞாபகம் இல்லை. ரூ.60000 சீட்டு எந்த வருடம் மாதம் ஆரம்பிக்கப்பட்டது என்றால் 2016 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

ரூ.50000 சீட்டில் மொத்தம் எத்தனை நபர்கள் என்றால் சீட்டு எண்ணிக்கை எத்தனை என்று தெரியும். எத்தனை நபர்கள் எத்தனை சீட்டுகள் சேர்ந்தார்கள் என்று தெரியாது. நான் என்றைக்காவது ஏலம் நடக்கும்போது நான் பார்த்து இருக்கிறேனா என்றால் ஆமாம். அவ்வாறு பார்த்த போது ஏலம் எடுத்த நபர் யாராவது ஞாபகம் இருக்கிறதா என்றால் இல்லை. நான் 42 வாரம் மற்றும் 118 வாரம் செலுத்தியதாக சொல்லும் தொகை விவரங்களை நான் குறித்து வைத்துள்ளேன் என்றால் சரிதான். நான் போலிஸ் விசாரணையின்போது மேற்சொன்ன குறித்து வைத்துள்ள குறிப்புகளை போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. போலிசார் அந்த குறிப்புகளை பார்த்து சரிபார்த்தார்களா என்றால் இல்லை. ஆஜர் எதிரிகள் 9 மாதம் கழித்து வந்தார்கள் என்று சொல்லியுள்ளதில் அந்த 9 மாதத்தில் அவ்வாறு சீட்டு பிரிக்கவில்லை என்றும் பணத்தை கொண்டு போய் விட்டார்கள் என்றும் புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் ஆமாம் SP அலுவலகத்தில் புகார் கொடுத்தோம். யார், யார் எல்லாம் புகார் கொடுத்தோம் என்றால் பெயர் ஞாபகம் இல்லை, ஒரு 40 பேர் புகார் கொடுத்தோம். தனித்தனியாக புகார்கொடுத்தோமா, மொத்தமாக புகார் கொடுத்தோமா என்றால் மொத்தமாக கொடுத்தோம். SP அலுவலகத்தில்

கொடுத்த புகார் கடையம் காவல் நிலையத்திற்கு விசாரணைக்கு வந்தது என்றாலும் அங்கு வைத்து எங்களை விசாரித்தார்கள் என்றாலும் சரிதான். அப்போது எதிரிகளை அழைத்து விசாரித்தார்களா என்றால் ஆமாம். அந்த விசாரணையில் எங்களிடமும் எதிரிகளிடமும் வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் சரிதான். விசாரணையில் என்ன சொன்னார்கள் என்றால் ஆஜர் எதிரிகளிடம் பணம் செலுத்திதாக சொன்னோம். போலிஸ் என்ன முடிவு சொன்னார்கள் என்றால் விசாரணை செய்கிறோம் என்று சொன்னார்கள். அதற்கு பிறகு நாங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் போலிசார் நடவடிக்கை எடுக்கவில்லை அதற்கு பிறகு அங்கு கொடுத்த புகாருக்கும் நடவடிக்கை எடுக்கவில்லை, அதற்கு பிறகு கிருஷ்ணன் என்பவர் மூலம் புகார் கொடுத்து வழக்கு போடப்பட்டுள்ளது. கொடுத்ததாக சொல்லும் புகாரில் எத்தனை பேர் கையொப்பம் செய்தோம் என்றால் தெரியவில்லை. புகாரை நான் படித்து பார்த்தேனா என்றால் இல்லை. புகாரை படித்து பார்க்கவில்லை என்பதால் அந்த புகாரில் என்ன விவரம் சொல்லப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். முதலில் SP அலுவலகத்தில் கொடுத்ததாக சொல்லியுள்ள புகாருக்கு பிறகு எத்தனை மாதம் கழித்து கிருஷ்ணன் மூலம் புகார் கொடுத்தோம் என்றால் எத்தனை மாதம் என்று ஞாபகம் இல்லை.

மணிராஜ் என்பவரின் அப்பா பெயர் மற்றும் ஊர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பூங்கொடி சூசை என்பவரின் கணவர் பெயர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஆஜர் எதிரிகளிடம்பணம் கேட்டதாக சொல்லும் நாளில் காலையில் காவல் நிலையம் சென்றோமா என்றால் மாலையில்தான் சென்றோம். நான் சொல்வது போல் நான் சொன்ன தேதியில் எதிரிகளிடம் கிருஷ்ணன் பணம் கேட்பதாக கேள்விப்பட்டு நான் போனதாகவும் அவர்கள் எங்களை கீழ்தரமான வார்த்தைகளால் சீட்டு ரூபாய்க்கு என்ன ஆதாரம் இருக்கிறது என்றும் பணத்தை திருப்பி கேட்டால் கொலைசெய்துவிடுவோம் என்றும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் எந்த காலத்திலும் எந்த ஒரு சீட்டும் நடத்தவில்லை என்றால் சரியல்ல. மாயவன் கோவில் நிர்வாகம் சார்பாக கிருஷ்ணன் தரப்புக்கும் எதிரிகள் தரப்புக்கும் பிரச்சனை இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கிருஷ்ணன் தரப்புக்கு ஆதரவாக அவர் கொடுத்த பொய் புகாருக்கு கிருஷ்ணனின் ஆதரவாளர்களாகியா நாங்கள் அனைவரும் சேர்ந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கும் பணம் கிடைக்கவில்லை, கிருஷ்ணனுக்கும் பணம் கிடைக்கவில்லை. எதிரிகள் நம்பிக்கையாக சீட்டு போடுங்கள் பணம் தருகிறோம் என்று சொன்னார்கள் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை

போலிசார் என்னை எப்போது எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் புகார் கொடுத்த அன்று கடையம் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். சுமார் 75 பேரை ஒரு அளுக்கு ஒரு மணி நேரம் விசாரித்தார்களா என்றால் 3 பேர் காவல் நிலையத்திற்குள் சென்றார்கள் அங்கு அவர்களை விசாரித்து விட்டு வெளியே இருந்த எங்களிடம் வந்து விவரங்கள் கேட்டார்கள். எங்களிடம் மொத்தமாக விவரங்கள் கேட்டார்கள் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னதைத்தான் போலிஸ்விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான். ஏலக்கழிவுபோகத்தான் வாரச்சீட்டு செலுத்துவேன் என்றால் சரிதான். ஏலம் எடுக்கும் நபர் கேட்கும் அதிகபட்ச தொகையை கழிவாக கழிப்பார்கள் என்றால் சரிதான். ஏலம் எடுத்த நபர் ஏலம் எடுத்த வாரத்தில் இருந்து முழுத்தொகையை செலுத்தவேண்டும் என்றால் சரிதான். ஒவ்வொரு சீட்டிலும் இரண்டாது சீட்டு மாயவன் கோவிலுக்குத்தான் என்றால் சரிதான். ஏலம் கேட்கும் நபருக்கு கழிவுத்தொகை போக சீட்டு பணத்தை கோவிலில் வைத்து அப்போது கொடுத்துவிடுவார்கள் என்றால் சரிதான்.

நான் சொல்வது போல் முதல் விசாரணையில் சொன்னது போல் இந்த வழக்கிற்கும் 2ம் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால சரியல்ல. 2ம் எதிரியை அவருக்கு வேண்டப்பட்டவரோ யாரும் தனிப்பட்ட முறையில் சீட்டு நடத்தவில்லை என்றால் சரியல்ல.

1ம் எதிரி தரப்பில் செய்யப்பட்ட குறுக்குவிசாரணை 2ம் எதிரி தரப்பில் ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tr.M.Ponpandi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 563/2024 |
| | : | Prosecution P.W - 20 |
| NAME | : | மணிராஜ் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday of 05.11.2024

முதல் விசாரணை

நான் மையிலப்ப புரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எனக்கு கிருஷ்ணன், அந்தோணிராஜ், செல்வராஜ், ஜோசப் ராஜ், பூங்கொடி சூசை, அருமைகிளி, டேவிட் அமல்ராஜ், பாலமுருகன், செல்வராணி, சீதாலெட்சுமி, பொன் பாண்டி, சாந்தி, குணசீலன், முத்துலெட்சுமி, செல்வக்குமாரி, முருகன், சரோஜா ஆகியோர்களை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகள் கோவிலில் சீட்டு பிரித்தார்கள். அவர்களை நம்பி சீட்டு போடுங்கள் என்று சொன்னார்கள். ரூ.60000 சீட்டு, ரூ.30000 சீட்டு, ரூ.61000 சீட்டு, ரூ.50000 சீட்டு போன்ற வாரச்சீட்டுகளையும் மற்றும் மாத சீட்டும் நடத்தினார்கள்.

நான் ரூ.50000 வாரச்சீட்டில் 2 சீட்டு சேர்ந்தேன். இதில் மொத்தம் 101 வாரம் சீட்டு செலுத்துவேண்டும் நான் 42 வாரங்கள் சீட்டு செலுத்தினேன். மீதி வாரத்தில் ஆஜர் எதிரிகள் மோசடி ஆகிவிட்டது என்று சொன்னார்கள். 22.10.2019 வரை செலுத்தினேன். நான் மொத்தம் ரூ.34780 பணம் செலுத்தி உள்ளேன். கிருஷ்ணன் என்பவர் பொங்கலின்போது சீட்டை கேட்டுள்ளார். கோவில் அருகே வைத்து ஆஜர்

எதிரிகள் பணம் கிடையாது என்று சொன்னார்கள். நானும் கேட்டேன் எனக்கும் கிடையாது என்று சொன்னார்கள். புண்ட மகனே என்று பேசினார்கள். தேவடிய மகனே என்று ஏசினார்கள். நாங்கள் கடையம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். எனக்கு பணம் கிடைக்கவில்லை போலிசார் என்னை விசாரித்தார்கள்.

1ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை

நான் முதல் விசாரணையில் சொன்னதைத்தான் போலிஸ் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான். ஆஜர் எதிரிகளை எத்தனை வருடங்களாக எனக்கு தெரியும் என்றால் 6 வருடங்களாக தெரியும். நான் எந்த வருடத்தில் இருந்து ஆஜர் எதிரிகளிடம் சீட்டு போட்டேன் என்றால் வருடம் ஞாபகம் இல்லை. சுமாராக எத்தனை வருடங்கள் அவர்களிடம் சீட்டு போட்டிருப்பேன் என்றால் ஒரு வருடம் போட்டிருப்பேன். ஆஜர் எதிரிகளில் மாயவன் யார் என்றும், மாயவநாதன் யார் என்றும் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அருமைக்கிளியின் கணவர் பெயர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அருமைக்கிளிக்கு எந்த ஊர் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வெய்க்காலிப்பட்டி.

டேவிட்அமல்ராஜ் அப்பா பெயர், பாலமுருகன் அப்பா பெயர், பொன்பாண்டி அப்பா பெயர், குணசீலன் அப்பா பெயர், முருகன் அப்பா பெயர், சீதாலட்சுமியின் கணவர் பெயர், சரோஜா கணவர் பெயர், சாந்தி கணவர் பெயர், முத்துலட்சுமி கணவர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

காவல் நிலையத்தில் கொடுத்ததாக சொல்லும் புகாரில் நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் அந்த புகாரை படித்து பார்த்தேனா என்றால் இல்லை. நான் ரூ.50000 வாரச்சீட்டில் 2 சீட்டு சேர்ந்தேன் என்றும் இதில் மொத்தம் 101 வாரம் சீட்டு செலுத்துவேண்டும் என்றும் நான் 42 வாரங்கள் சீட்டு செலுத்தினேன் என்றும் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரங்கள் அந்த புகாரில் சொல்லப்பட்டு இருந்ததா என்றால் ஆமாம். கிருஷ்ணன், அந்தோணிராஜ், செல்வராஜ், ஜோசப் ராஜ், பூங்கொடி சூசை, அருமைகிளி, டேவிட் அமல்ராஜ், பாலமுருகன், செல்வராணி, சீதாலெட்சுமி, பொன் பாண்டி, சாந்தி, குணசீலன், முத்துலெட்சுமி, செல்வக்குமாரி, முருகன், சரோஜா ஆகியோர்கள் எந்த எந்த சீட்டில் எவ்வளவு பணம் செலுத்தினார்கள் என்ற விவரம் புகாரில் சொல்லப்பட்டு இருந்ததா என்றால் ஆமாம். அந்த புகாரில் என்னை தவிர மேற்சொன்ன நபர்கள் கையொப்பம் செய்திருந்தார்களா என்றால் ஆமாம். சாட்சி பொன்சேகர், மற்றும் சுதா ஆகியோர்களும் அந்த புகாரில் கையொப்பம் செய்து இருந்தார்களா

என்றால் ஆமாம். கோவில் அருகே வைத்து எதிரிகள் பணம் கிடையாது என்று சொன்னர்கள் என்றும் நானும் கேட்டேன், எனக்கும் கிடையாது என்று சொன்னார்கள் என்றும் புண்ட மகனே என்றும், தேவிடியா மகனே என்றும் ஏசினார்கள் என்றும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் நான் எந்தவித சீட்டும் எதிரிகளிடம் போட்டிருப்பது கிடையாது என்றாலும் எதிரிகள் சீட்டு நடத்தி இருப்பது கிடையாது என்றாலும் சரியல்ல. கிருஷ்ணன் வேண்டுகோளுக்கு இணங்க பொய் புகார் கொடுத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்மில்லை என்றால் சரியல்ல.

2ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை

நான் சீட்டுக்கு வாரம் எவ்வளவு செலுத்துவேன் என்றால் ரூ. 500 செலுத்துவேன். ஏலக்கழிவுபோக மீதி பணத்தை சீட்டு பணமாக செலுத்துவேன் என்றால் சரிதான். ஏலம் எடுக்கும் நபர் ஒரு வாரத்தில் கேட்கும் தொகையை கழிவுத்தொகையாக கழிப்பார்கள் என்றால் சரிதான். சீட்டுத்தொகை ரூ.500ல் உள்ள கழிவுத்தொகையை கொடுத்துவிடுவார்கள் என்றால் சரிதான். ஏலம் எடுத்த நபர் ஏலம் எடுத்த சீட்டில் இருந்து முழுத்தொகையை கழிவுஇல்லாமல் செலுத்தவேண்டும் என்றால் சரிதான். கழிவுத்தொகை நான் போட்டு இருக்கும் இரண்டு சீட்டுக்கும் பொருந்தும் என்றால் சரிதான். ஒரு ஏலம் எடுத்த நபர் அடுத்த சீட்டு ஏலம் எடுக்க முடியுமா என்றால் எடுக்க முடியாது. ஒரு சீட்டு எடுத்த நபர் அதே சீட்டில் உள்ள மற்றொரு சீட்டை எப்படி எடுப்பார் என்றால் அதே நபர் இரண்டு வாரங்கள் கழித்து எடுப்பார். ஏலம் கேட்கும் நபருக்கு அன்றைக்கே கோவிலில் வைத்து சீட்டு பணம் கொடுத்துவிடுவார்கள் என்றால் சரிதான். ஒவ்வொரு வாரச்சீட்டிலும் இரண்டாவது சீட்டு கோவிலுக்குத்தான் என்றால் ஆஜர் எதிரிகள் தான் சீட்டு பிரித்தார்கள் இரண்டாவது சீட்டு கோவிலுக்கு போகிறதா என்று எனக்கு தெரியாது. போலிசார் விசாரித்தார் என்று சொல்லியுள்ளதில் ஏட்டையா விசாரித்தாரா SI விசாரித்தாரா என்றால் இன்ஸ்பெக்டர் அம்மா விசாரித்தார். போலிசார் என்னை எப்போது விசாரித்தார் என்றால் புகார் கொடுத்த அன்று விசாரித்தார்கள், இரண்டு நாள் கழித்து எனது வீட்டில் வந்து விசாரித்தார்கள். ஒவ்வொரு வாரமும் எவ்வளவு கழிவு போகும் என்ற விவரத்தை எழுதிவைத்துத்தான் அந்த கூட்டுத்தொகையை சொல்கிறேன் என்றால் சரிதான். போலிஸ் விசாரணையில் அந்த சீட்டை கொடுத்துத்தான் தொகையை சொன்னேன் என்றால் சரிதான். 42 வாரம் ஏற்கனவே சீட்டு எடுத்திருந்தவர்கள் அதற்கு பிறகு பணம் செலுத்தவில்லை என்றால் சரிதான். ஆஜர் எதிரிகள் பிரித்திருந்தால் செலுத்தியிருப்பார்கள். நான் சொல்வது போல் முதல் விசாரணையில்

சொன்னது போல் இந்த வழக்கிற்கும் 2ம் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால சரியல்ல. 2ம் எதிரியை அவருக்கு வேண்டப்பட்டவரோ யாரும் தனிப்பட்ட முறையில் சீட்டு நடத்தவில்லை என்றால் சரியல்ல.
1ம் எதிரி தரப்பில் செய்யப்பட்ட குறுக்குவிசாரணை 2ம் எதிரி தரப்பில் ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tr.M.Ponpandi
Judicial Magistrate,
Tenkasi